FIRST BOOK

OF

LESSONS IN READING

For the use of Native Children

IN THE

MADRAS PRESIDENCY.

SECOND EDITION—3,000 Copies.

PRINTED AND PUBLISHED
FOR THE MADRAS SCHOOL BOOK SOCIETY.
AMERICAN MISSION PRESS, MADRAS.
1855.

PART FIRST.

Lesson 1.

A house.
A room.
The door.
The street.

Trees.
Birds.
The sky.
Paddy fields.

A book.
A pen.
Paper.
A pot.

Reading Exercise.

There is a house.
Here is a room.
Open the door.
Go into the street.
Look at the trees.
The birds fly.
The sky is blue.

The paddy fields are green.
A new book.
The pen has no ink in it.
The paper is white.
The pot is empty.

சூரியனின் காந்தி, (சூரிய வெளிச்சம்).	நரியின்தந்திரம்,(கபடு.
சக்கரையின் தித்திப்பு.	ஆட்டுக்குட்டியின் சாந்த குணம், (அமர்ந்த குணம்.)

வாசக பழக்கம்.

தடியின் நீளம் இரண்டு முழம்.

சுவரின் உயரம் எட்டு அடி.

தெருவின் அகலம் ஐந்து பாகம்.

யானையின் பலம் மிகவும் பெரிது. அது பெரிய மரங்களை கீழே தள்ளும்.

சூரியனின் காந்தி ஒளி வீசுகின்றது.

சக்கரையின் தித்திப்பு நாவுக்கு உரிசை.

நரியானது தந்திரமான மிருகம். அது கோழிகளை திருடுது; (நரி கபடசெந்து. அது கோழி திருடும்).

ஆட்டுக்குட்டி சாந்தமானது. அது ஒருவருக்கும் வருத்தம் செய்கிறதில்லை.

Lesson 7.

New book.	Short stick.	Tame bird.
Clean mat.	Sharp knife.	Wild beast.
Old man.	Black crow.	Good girl.
Young lad.	White clouds.	Idle boy.

Reading Exercise.

I must learn to read this *new* book.
Sit down on the *clean* mat.
What an *old* man that is!
The gardener is a *young* lad.
How *short* this stick is!
The knife is very *sharp.*
See how *tame* that bird is!
Here is a *wild* beast.
How *black* the crow is!
The clouds are high and *white.*

எ. பாடம்.

புதியபுத்தகம்.	குட்டைத் தடி, குறும் தடி.	பழகினபட்சி.
சுத்தமான பாய்.	கருக்கானகத்தி.	காட்டுமிருகம்.
கிழவன், விருத்தாப்பியன்.	கறுப்புக் காக்கை, கருங்காக்கை.	நல்ல பெண்.
வாலிபன், வயசாள், வயதாள்.	வெள்ளைமேகம்	சோம்பேறி.

வாசக பழக்கம்.

இந்த புதிய புத்தகத்தை வாசிக்க நான் பழகவேணும்.

சுத்தமான பாயின்மேல் உளுக்காரு.

அவன் எவ்வளவு விருத்தாப்பியமாய் இருக்கிறான்!

தோட்டக்காரன் வாலிபன்.

இந்த தடி எவ்வளவு குட்டையாய் இருக்கிறது!

இந்த கத்தி மிகவும் கருக்கானது.

அந்த பட்சி எவ்வளவு பழகினது பார்!

இதோ இங்கே ஒரு காட்டு மிருகம்.

காக்கை எவ்வளவு கறுப்பாய் இருக்கிறது!

மேகங்கள் உயரமாயும் வெண்மையாயும் தோன்றுகின்றன.

The *good* girl minds her sewing.
The *idle* boy does not love his book.

Lesson 8.

Large house.	Larger house.
Long pole.	Longer pole.
Short boy.	Shorter boy.
Tall man.	Taller man.

Young.	Younger.	Youngest.
High.	Higher.	Highest.
Heavy.	Heavier.	Heaviest.
Light.	Lighter.	Lightest.
Good.	Better.	Best.
Bad.	Worse.	Worst.

நல்ல பெண் தன் தையல்மேல் கண்ணுயிருப்பாள், (கண்ணுண்டாயிருப்பாள்).

சோம்பேறி படிப்பின்மேல் ஆசைவைக்க மாட்டான்.

அ. பாடம்.

பெரிய வீடு.	அதிக பெரிய வீடு.
நீண்ட தம்பம். [யன்.	மிக நீண்ட தம்பம்.
குள்ளன், குட்டை பை	அதிக குள்ளன்.
நெட்டை மனிதன்.	மிக நெடிய மனிதன்.

இளமை யான.	மிக இளமையான.	மிகவும் இளமை யான.
உயர்ந்த.	மிக உயர்ந்த.	மிகவும் உயர்ந்த.
பளுவான.	மிகு பளுவான, அதிகபளுவான	மிகவும் பளுவான
இலேசான சுளுவான.	அதிக லேசான, மிகு சுளுவான.	வெகு லேசான, மிகவுஞ்சுளுவான.
நேர்த்தியான, நல்ல.	அதிக நேர்த்தியான, மிகநல்ல.	மெத்த நேர்த்தியான, வெகுநேர்த்தியான, மகா நேர்த்தியான.
கெட்ட, [த. பொல்லா	மெத்த கெட்ட, மிகு பொல்லாத.	கன பொல்லாத, சுத்த பொல்லாத.

Reading Exercise.

Look how *large* that house is! Yes, but the other is *larger.*

Here are two poles. One of them is *longer* than the other.

This boy is *shorter* than that.

This man is *tàller* than the other.

The butler is *younger* than the cook.

This tree is *higher* than that, but the other is the *highest* of all.

Iron is *heavy.* Silver is *heavier.* Gold is *heaviest.*

Wood is *light.* Cotton is *lighter.* A feather is *lightest.*

This is a *good* orange, that is *better,* but the other is the *best* of all.

வாசக பழக்கம்.

அந்த வீடு எவ்வளவு (எத்தனை) பெரிது பார்! ஆம் (அது நிசந்தான்), ஆனால் இந்த வீடு அதிக பெரிது.

இங்கே இரண்டு தம்பங்கள் இருக்கின்றன, அவைகளில் ஒன்று மற்றொன்றைப்பார்க்கிலும் நீண்டது.

இந்த பையன் அவனிலும் குள்ளன், (இந்த பையன் அவனைப்பார்க்கிலும் குட்டையன்).

இந்த மனிதன் மற்றவனைப்பார்க்க நெடியவன், (இவன் மற்றவனிலும் நெடியவன்).

தவசிப்பிள்ளையைப்பார்க்க பொட்லர் வாலிபன்.

இந்த மரம் அதிலும் உயர்ந்தது, மற்றதோ எல்லாத்திலும் உயர்ந்தது.

இரும்பு பளுவானது, வெள்ளி அதிக பளுவானது, பொன்னோ மிகவும் பளுவானது.

மரம் இலேசானது, பஞ்சு அதிக லேசானது, இறகு வெகு லேசானது, (மிகவும் லேசானது).

இது நல்ல கிச்சிலிப்பழம், அது அதிக நல்லது, மற்றதோ இரண்டிலும் நல்லது.

Lesson 9.

The horse walks.
The sheep bleats.
The crow flies.
The dog barks.
Frogs croak.
Worms creep.

Bees hum.
Scorpions sting.
Monkeys chatter.
Little boys and girls read and learn.

Lesson 10.

The sun shines.
The wind blows.
Rain falls.
Water flows.
Trees grow.
Flowers blossom.
Fire burns.

Gold glitters.
The lightning shines.
The thunder roars.
Diamonds sparkle.
Stars twinkle.
Time flies.

௯. பாடம்.

குதிரை நடக்குது.
ஆடு கத்துது.
காக்கை பறக்குது.
நாய் குலைக்குது.
தவளைகள் கத்துது, குற குறக்கின்றன.
புழுக்கள் ஊருகின்றன.

தேன் ஈக்கள் தேன் இடுகின்றன.
தேள்கள் கொட்டுகின்றன.
குரங்குகள் கை கீ என்கின்றன.
சிறு பிள்ளைகளும் பெண்களும் வாசித்துப் படிக்கிறார்கள்.

௰. பாடம்.

சூரியன் பிரகாசிக்கிறது.
காற்று அடிக்குது.
மழை பெய்கிறது.
தண்ணீர் பாயுது.
மரங்கள் வளர்கின்றன.
புட்பங்கள் புட்பிக்கின்றன, பூக்கள் பூக்கின்றன.
நெருப்பு எரிகிறது.

பொன் மின்னுகிறது.
மின்னல் மின்னுகிறது.
இடி இடிக்குது, இடி முழங்குகிறது.
வயிரக்கல்லுகள் பளிச்சு பளிச்சு என்கின்றன.
நட்சத்திரங்கள் மினுக்கு மினுக்கு என்கின்றன, (மின்னுகின்றன).
காலம் பறக்குது, (கழிகின்றது).

Lesson 11.

I am good.
Thou art idle.
He is industrious.
She is careful.
The sun was hot.
The wind was strong.
The air was cool.
The day has been fine.
The little girl will be good.
There will be rain to-night.
The tanks will be full of water.
We are happy.
You are awake.
They are rich.
It is late.
The night was dark.

௰௧. பாடம்.

நான் நல்லவன்.
நீ சோம்பேறி.
அவன் உழைப்பாளி.
அவள் கருத்துங் கவலையுமுள்ளவள், (அவள் கவலையுள்ளவள்).
சூரியன் காங்கையாய் (வெயில், உஷ்ட்ணமாய்) இருந்தது.
காற்று பலமாய் அடித்தது.
ஆகாயம் குளிர்ந்து இருந்தது. (காற்று)
இன்றைக்கு நன்ருய், (நேர்த்தியாய், சவுக்கியமாய்) இருந்தது.
சிறிய பெண் நல்லவளாய் இருப்பாள்.
இன்று இராத்திரிக்கு மழை பெய்யும்.
குளங்கள் நீர் நிறைந்து இருக்கும்.
நாங்கள் பாக்கியசாலிகளாய் இருக்கிருேம்.
நீங்கள் விழித்து இருக்கிறீர்கள்.
அவர்கள் ஆஸ்திக்காரர், (பணக்காரர்).
நேரம் ஆய்விட்டது, (நேரம் சென்றுபோயிற்று, காலம் தாமதமாய்விட்டது).
இராத்திரி இருட்டாய் இருந்தது.

The boy was yoùng.
His clothes were neat.
Four men have been drowned.
The grass will be fresh and green.
The sky will be red this evening.
The weather will be fair to-morrow.

Lesson 12.

That little boy leads the blind man.
The dog barks at the man.
The schoolmaster wrote that letter.
Rain fell from the clouds.
The sun will dry the mud.
Diamonds will sparkle in the light.

பையன் இளைஞனாய் இருந்தான்.

அவனுடைய வேட்டி நேர்த்தியாய் (சொகுசாய்) இருந்தது.

நாலு மனிதர் அமிழ்ந்திப்போனார்கள், (முழுகிப்போனார்கள்).

புல் துளிராயும் பச்சையாயும் இருக்கும்.

இன்று சாயங்காலம் செவ்வானம் இட்டு இருக்கும்.

நாளைக்கு மப்பு மந்தாரம் இல்லாமல் நன்றாய் இருக்கும், (நாளைக்கு காற்று மழை இல்லாமல் நன்றாய் இருக்கும்).

௰உ. பாடம்.

அந்த சிறு பையன் குருடனை வழி நடத்தி கொண்டுபோகிறான், (கூட்டிகொண்டுபோகிறான்).

நாய் அந்த மனிதனை பார்த்து குலைக்கிறது.

வாத்தியார் அந்த கடிதத்தை எழுதினார்.

மழை பெய்தது, (மழை மேகத்திலிருந்துவிழுந்தது.)

சூரியன் சேற்றை காயவைக்கும்.

வைரங்கள் வெளிச்சத்திலே பளிச்சு பளிச்சு என்று மின்னும்.

This is a useful book.

Boys are fond of play.

His brother was here yesterday.

He has been to school. He can read.

You will be a clever boy, if you read your book.

A careful girl will be neat and clean.

I heard the master call.

You do not speak the truth.

You have told a lie. You will be punished.

Good boys do not tell lies.

Every one loves good boys and girls.

Lesson 13.

I. Mine. Me. We. Ours. Us.

இது ஒரு உத்வியான (பிரயோசனமான)புத்தகம்.

ஆண் பிள்ளைகளுக்கு விளையாட்டின்-மேல் ஆசை. [ன்.

நேற்று அவன் சகோதரன் இங்கே இருந்தா

அவன் பள்ளிக்கூடத்திலிருந்தவன்,அவன் வாசிப்பான்.

நீ உன் புத்தகத்தை படித்தால் சமர்த்தன் ஆவாய். [ருப்பாள்.

கருத்துள்ள பெண் சீராயும் சுத்தமாயும் இ

வாத்தியார் கூப்பிட கேட்டேன்.

நீ மெய் பேசுகிறது இல்லை,(நீ மெய் சொல்லுகிறது இல்லை).

நீ பொய் சொன்னாய், உனக்கு தண்டனை கிடைக்கும்.

நல்ல பிள்ளைகள் பொய் சொல்லார்கள்.

நல்ல பிள்ளைகளையும் பெண்களையும் எல்லாரும் சிநேகிப்பார்கள்.

௰௩. பாடம்.

நான்.	என்னுடைய, எனது.	என்னை	நாங்கள், நாம்.	எங்களுடைய, எங்கள்.	எங்களை, நம்மை.

Reading Exercise.

I have learnt my task.
That pen is *mine*.
The master gave it to *me*.
We found our books.
We have lost *ours*.
Let *us* look for them.

Thou. Thine. Thee. You. Yours. You.

Reading Exercise.

Thou art my friend.
This cloth is *thine*.
It was given to *thee*.
You may take this board.

வாசக பழக்கம்.

நான் பாடம் படித்தேன், (நான் என் பாடத்தை படித்து ஆயிற்று).

இந்த இறகு என்னுடையது.

அதை வாத்தியார் எனக்கு கொடுத்தார்.

எங்கள் புத்தகங்களை கண்டுபிடித்தோம்,(எங்கள் புத்தகங்கள் அகப்பட்டன).

நம்முடையவற்றை இழந்தோம் (போக்கடித்தோம்). நம்முடையவைகள் காணாமல் போயின.

நாம் அவைகளை தேடிப்பார்ப்போம்.

நீ.	உன், உன்னுடைய, உனது.	உன்னை	நீங்கள்.	உங்களுடைய, உங்கள்.	உங்களை.

வாசக பழக்கம்.

நீ எனது சிநேகிதன், (நீ எனக்கு சிநேகிதன்).

இந்த வஸ்திரம் உன்னுடையது.

அது உனக்கு கொடுக்கப்பட்டது.

இந்த பலகையை நீ எடுத்துகொள்ளலாம்.

He broke *yours*.
I will give *you* another.

He. His. Him. She. Hers. Her.
It. Its. It. They. Theirs. Them.

Reading Exercise.

He is a fine boy.
That box is *his*.
Then give *it* to him.
It is here.
Let *it* alone.
The riǹg is *hers*.
She put it on my fiǹger.
Look how brightly *its* diamonds shine.
They are *your* father's friends.
Tell *them* to come in.

அவன் உன்னுடைய பலகையை உடைத்திட்டான்.

நான் உனக்கு வேறு ஒன்று கொடுப்பேன்.

அவன்.	அவனுடைய.	அவனை.	அவள்.	அவளுடைய.	அவளை.
அது.	அதினுடைய, அதின்.	அதை.	அவர்கள், அவைகள்.	அவர்களுடைய அவைகளுடைய	அவர்களை, அவைகளை.

வாசக பழக்கம்.

அவன் நல்ல பையன்.

அந்த பெட்டி அவனுடையது.

அப்படியானால் அதை அவனுக்கு கொடு.

இதோ இருக்குது அது.

அது அப்படியே இருக்கட்டும்.

மோதிரம் அவளுடையது.

அவள் அதை என் விரலிலே போட்டாள்.

அதின் வயிரக்கல் எவ்வளவு காந்தியாய் மின்னுது.

அவர்கள் உன் தகப்பனின் சிநேகிதர்கள்.

அவர்களை உள்ளே வர சொல்.

Lesson 14.

Who.	**Whose.**	**Whom.**
Which.	**That.**	**What.**

Reading Exercise.

Who lives in that house?

The man *who* sells eggs.

Whose umbrella is that?

It is the schoolmaster's *which* he left here yesterday.

What is your name?

Which is better?

There is the dog *that* bit the poor man.

To *whom* do you speak?

௰௪. பாடம்.

ஆர், யார்.	ஆருடைய.	ஆரை, யாரை.
எது, யாது.	அது.	எந்த, என்ன, எதை.

வாசக பழக்கம்.

அந்த வீட்டிலே குடியிருக்கிறது ஆர்?

முட்டை விற்கிறவன்.

அந்த குடை ஆருடையது? (அது யாருடைய குடை? யாருடைய குடை அது?)

வாத்தியாருடையது, அதை அவர் நேற்று இங்கே வைத்து போனார்.

உன் பேர் என்ன?

எது அதிக நல்லது?

எளிய மனிதனை கடித்த நாய் அதோ நிற்குது.

யாரண்டை பேசுகிறாய், (யாரிடத்தில் பேசுகிறாய்).

Lesson 15.

This. That. These. Those.

Reading Exercise.

This book was bought for two annas.
That book cost four.
This is dearer than *that*.
These pens are not mended.
Those pots are broken.
The peon saw *that* man and *those* boys stealing.

Lesson 16.

My. Thy. His. Her.
Our. Your. Their.

௰௫. பாடம்.

இது, இந்த.	அது, அந்த.	இவைகள், இந்த.	அவைகள், அந்த.

வாசக பழக்கம்.

இந்த புத்தகம் இரண்டு அணாவுக்கு வாங்கினது.

அந்த புத்தகத்தின் விலை நாலு அணா.

இது அதிலும் கிராக்கி ஆனது.

இந்த இறகுகள் வெட்டப்பட இல்லை.

அந்த பானைகள் உடைந்தன.

அந்த மனிதனும் அந்த பிள்ளைகளும் திருட சேவகன் கண்டான்.

௰௬. பாடம்.

என், என்னுடைய.	உன், உன்னுடைய.	அவன், அவனுடைய.	அவள், அவளுடைய.
நமது, நம்முடைய.	உங்கள், உங்களுடைய.	அவர்கள், அவைகள், அவர்களுடைய, அவைகளுடைய.	

Reading Exercise.

He is *my* brother.
She is *thy* sister.
I am *his* cousin.
That girl is *her* nièce.
They are *our* parents.
We are *their* children.
It is *your* duty to love and obey *your* parents.

Lesson 17.

The birds fly *quickly*.
He can read *well*.
The horse ran *swiftly*.
That man talks *too much*.
When did he leave this place?
Can you speak to me *now*?
She was *here* this morning.
You were not *there*.

வாசக பழக்கம்.

அவன் என் சகோதரன், (அவன் என் உடன் பிறந்தவன்).

அவள் உன் சகோதரி, (அவள் உன் உடன் பிறந்தவள்).

நான் அவனுக்கு மச்சினன்.

அந்த பெண் அவளுக்கு அண்ணன் மகள்.

அவர்கள் நமக்கு தாய் தந்தைகள், (அவர்கள் நம்மை பெற்றவர்கள்).

நாங்கள் அவர்களுடைய பிள்ளைகள்.

உங்கள் தாய் தந்தைகளுக்கு கீழ்ப்படிந்து (அவர்களை) சிநேகிக்கிறது உங்கள் கடமை.

௰எ. பாடம்.

குருவிகள் சுருக்காய் பறக்கின்றன.

அவன் நன்ருய் வாசிப்பான்.

குதிரை வேகமாய் ஓடிற்று.

அந்த மனிதன் மெத்த பேசுகிருன்.

அவன்இங்கிருந்துஎப்பொழுதுபோனுன்? (அவன் இந்த இடத்தை எப்பொழுது விட்டான்?)

நீஇப்பொழுதுஎன்னேடுபேசுவாயா?

இன்று காலமே அவள் இங்கே இருந்தாள்.

நீ அங்கே இருந்ததில்லை.

Lesson 18.

They are the children *of* the school.
He was *in* the room.
The door was made *by* the carpenter.
Will you take a walk *with* me?
We shall go *into* the fields.
He went *from* Madras *to* Bangalore.
I have not seen him *for* a long time.
That man rides *on* a horse.

Lesson 19.

How kind *and* good the master is!
Boys read *and* play.
You are happy *because* you are good.
I wished to go, *but* he would not let me.
He will not come *although* I call him.
Wisdom is better *than* strength.

௰அ. பாடம்.

அவர்கள் பள்ளிக்கூடத்து பிள்ளைகள்.
அவன் அறைக்குள் இருந்தான்.
கதவு தச்சனால் செய்யப்பட்டது.
நீ என்னோடுகூட உலாத்த வருவாயா?
நாம் வயல்வெளிக்கு போவோம்.
அவன் சென்னபட்டணத்திலிருந்து பங்கனூருக்கு போனான். [லை.
நான் அவனை வெகுகாலமாய் பார்த்ததில்
அந்த மனிதன் குதிரை ஏறி போகிறான்.

௰கூ. பாடம்.

வாத்தியார் எவ்வளவு நல்லவரும் பட்சம் உள்ளவருமாய் இருக்கிறார்! [கள்.
பிள்ளைகள் படித்து (விட்டு) விளையாடுகிறார்
நீ நல்லவன், ஆகையால் சந்தோஷமாய் இருக்கிறாய்.
எனக்கு போக மனதுதான் ஆனால் அவன் என்னை விடமாட்டேன் என்றான்.
நான் அவனை அழைத்தும் அவன் வரேன் என்கிறான்.
பலத்தை பார்க்கிலும் ஞானம் வலியது, (நல்லது).

LESSON 20.

Ah! I see you.
Oh! What a large dog.
Hark! What noise is that?
Hush! Some one comes.

LESSON 21.—*On reading.*

Come, my dear child make haste. Now read your book. Here is a straw to point with. Do not tear the book. Spell that word. That is a good boy. Now go and play till I call you in.

LESSON 22.—*On learning.*

Try to learn fast. Thank those who teach you. Speak plain. Speak as if the words were your own. Do not

உ௰. பாடம்.

ஆ! உன்னை பார்க்கிறேன், (ஆ! உன்னை எனக்கு தெரியும், ஆ! தெரியுது தெரியுது).

ஓ! எத்தனை பெரிய நாய்.

அது என்ன சத்தம் கேள்!

பொறு, யாரோ ஒருவன் வருகிருன், (ஆரோ வருகிறதுபோல் இருக்குது).

உக. பாடம்.—வாசிப்பு.

என் அருமை பிள்ளையே வா, சீக்கிரம் வா. உன் புத்தகத்தை வாசி. குறிப்பு தெரிந்து (வாசிக்கிறதற்கு) இதோ ஒரு துரும்பு. புத்த கத்தை கிழிக்காதே. அந்த வார்த்தையை எ ழுத்து கூட்டு. இப்பொழுது நீ நல்ல பிள்ளை. நான் உன்னை உள்ளே வர சொல்லி கூப்பிடு கிற வரையிலே (வரைக்கும்) போய் விளையாடு.

உஉ. பாடம்.—படிப்பு.

சீக்கிரம் படிக்க பார், (பிரயாசைப்படு). உ னக்கு படிப்பு சொல்லி கொடுக்கிறவர்களுக்கு சரணம் சொல்லு. தெளிவாய் பேசு, (பிரிய பேசு). உன் சுயமாய் பேசுகிறதுபோல பேசு.

bawl, nor speak in too low a voice. Speak so that all in the room may hear you. Read as you talk.

Lesson 23.—*A cow.*

What a fine cow! Her skin is white with brown spots. She has a mild face, and likes to lie still on the grass. I can go to the cow, for she is tame and will not hurt me. Her horns are bent. Cows give us nice milk.

Lesson 24.—*An ass.*

Here is an ass. He stands so still. He is patient. I do not like to see bad men beat the poor ass so hard. He

உரத்தி கூவாதே, மிகவும் தணிந்த சத்தமாகவும் பேசாதே. அறைக்குள் இருக்கிற அனைவருக்கும் கேட்கும்படியாக பேசு. பேசுகிறதுபோல வாசி.

௨௩. பாடம்.—பசுமாடு.

என்ன நேர்த்தியான பசு! அதினுடைய உடம்பு வெண்மையாய் பழுப்பு நிறமான புள்ளி புள்ளியாய் இருக்குது. அது அமர்ந்த களையுள்ள முகம் உடையது. புல்லின்மேல் படுத்திருக்க அதற்கு பிரியம். அது பழகின பசுவாய் இருக்கிறதினால் அதின் கிட்ட நான் போவேன், அது என்னை முட்டாது. அதின் கொம்புகள் வளைவாய் இருக்கின்றன. பசுக்கள் நமக்கு உரிசையுள்ள பால் கொடுக்குது.

௨௪. பாடம்.—கழுதை.

இதோ இங்கே ஒருகழுதை. அது அமரிக்கையாய் (பேசாமல்) நிற்குது. அது பொறுமையுள்ளது. பரிதாபமான கழுதையை பொல்லாத மனிதர் அவ்வளவு கொடுமையாய் அடிக்கிறதை பார்க்க எனக்கு மனதில்லை. அதை

will work better if he be kindly treated. I will pat him and give him some food. I will be kind to him and he will be fond of me.

Lesson 25.—*The cat.*

The cat has sharp claws, soft fur, and a long tail. She looks gentle, but she is sly; and if she finds a rat, she will run after him, and kill him soon. She will catch birds and kill them. Do not teaze her, or she will scratch you, and make you bleed.

Lesson 26.—*The dog.*

Look, there is our dog! He takes good care of the house. He will bark,

பட்சமாய் நடத்தினால் அது அதிக நன்றாய் உழைக்கும். நான் அதை தட்டிக்கொடுத்து அதற்கு தீனி போடுவேன். நான் அதின் மேல் பட்சமாய் இருப்பேன், அதினால் அது க்கு என்னிடத்தில் நற்ருசை பிடிக்கும்.

௨௫. பாடம்.—பூனை.

பூனைக்கு கூரான நகங்கள் உண்டு, மெது வான மயிரும், நீளமான வாலும் இருக்குது. அது அமர்ந்த குணமாய் காணப்பட்டாலும், தந்திரம் உள்ளது. அது எலியை கண்டால், அதின் பிறகே ஓடி, அதை சீக்கிரம் கொல் லும். அது பட்சிகளை பிடித்து அவைகளை கொல்லுகிறது உண்டு. அதை தீண்டாதே, அது உன்னை பீறி இரத்தம் ஓடப்பண்ணும்.

௨௬. பாடம்.—நாய்.

அதோ நம்முடைய நாய்! அது வீட்டை பத்திரமாய் காவல் காக்குது. அது குலைக்கும்,

but he will not bite, if you do not hurt him. How well he knows his master! And how gladly he runs to meet him, wagging his tail for joy! Dogs are very faithful, and have more sense than most other beasts. We must be very kind to them.

LESSON 27.—*The buffalo.*

The buffalo is a stupid looking animal, but it is very useful to the poor peasant, and can draw the plough, with which the field is turned up for sowing grain. It is also yoked to carts. It likes to stay in the water, and to keep itself cool all day long. It is a slow brute, and must be made to work.

நீ அதற்கு தொந்தனை செய்யாதிருந்தால் அது உன்னை கடிக்கமாட்டாது. அதற்கு தன் எசமான் இன்னுனென்று எவ்வளவு நன்ருய் தெரியுது! கொண்டாட்டமாய் வாலை ஆட்டிக் கொண்டு அவனுக்கு எதிரே எவ்வளவு சந்தோஷமாய் ஓடுகிறது! நாய்கள் மெத்த விசுவாசம் உள்ளவைகள், மற்ற அநேக மிருகங்களை பார்க்கிலும் அதுகளுக்கு அதிக அறிவு உண்டு. அதுகளின்மேல் நாம் பட்சமாய் இருக்கவேண்டும்.

உஎ. பாடம்.—எருமை.

எருமை மாடானது பார்வைக்கு மூடம் பிடித்த மிருகம், ஆனுல் எளிய குடியானவனுக்கு மிகவும் பிரயோசனமானது. நெல் விளைக்கிறதற்கு வயல்களிலே உழுகிற கலப்பையை அது இழுக்குது. வண்டியிலும் பூட்டி ஓட்டப்படுகுது. தண்ணீரிலே கிடந்து ஒரு நாளெல்லாம் சில்லென்று இருக்க அதுக்கு கொண்டாட்டம். அது அசமந்தமான மிருகம். அதை வேலைகொள்ளவேணும் (செய்யும்படி பண்ணவேணும்).

LESSON 28.—*Kindness to animals.*

You must be kind to all animals. You must not hurt live things. You should not hurt blood-suckers and kill them, nor be cruel to poor lizards or spiders, for they will do you no harm. You must not hurt bees, or other little insects. They will not sting you, if you do not touch them. All things that breathe can feel as well as you can, and should not be hurt.

LESSON 29.—*Behaviour.*

Behave well. Think before you speak. Attend to what the master says. Repeat your lesson properly.

உஅ. பாடம்.—சீவராசிகளின்மேல் காருண்ணியம்.

எல்லா சீவராசிகளின்மேலும் நீ பட்சமாய் இருக்கவேணும். உயிர்ப் பிராணிகளை வருத்தல் ஆகாது. நீ ஒன்றை பிடித்து வருத்தஞ் செய்து அதை கொல்லாதே, பல்லிகளுக்கும் சிலந்தி பூச்சிகளுக்குங் கூட கொடுமைசெய்து வாதிக்காதே, ஏனென்றால் அவைகள் உனக்கு ஒரு தீங்குஞ் செய்கிறதில்லையே. நீ தேன் பூச்சிகளையாவது, மற்றும் சிறு பூச்சிகளையாவது வாதிக்கப்படாது. நீ அதுகளை தொடாதிருந்தால் அவைகள் உன்னை தங்கள் கொடுக்கினால் கொட்டாது. மூச்சுவிடுகிற சகல செந்துக்களுக்கும், உனக்கு இருக்கிறதுபோலவே, உணர்வு இருக்குது, ஆகையால் அவைகளுக்கு நீ வருத்தம்பண்ணாதே.

உகூ. பாடம்.—நடக்கை.

செம்மையாய் நடந்துகொள். நீ ஒன்றை பேசுமுன் நினைத்துபார். வாத்தியார் சொல்வதை கவனி. உன் பாடத்தை சரியாய் ஒப்பி.

Take pains to improve. A diligent boy delights his friends.

Lesson 30.—*Honesty.*

Be content with what you have. Deceive no one. When you have done wrong, confess it. Never tell an untruth. Be sincere in all you say or do.

Lesson 31.—*Duty to parents.*

My parents provide many things for me. I should always be grateful to them. I will do as they desire me to do. I will obey their commands and be good.

End of Part First.

தேறுகிறதற்கு பிரயாசப்படு. சாக்கிரதையான பையன் தன் சிநேகிதர்களுக்கு சந்தோஷம்.

௫௰. பாடம்.—யோக்கியம்.

உன்னிடத்தில் உள்ளது போதும் என்றிரு. ஒருவரையும் வஞ்சியாதே. தப்பிதம் செய்தால், அறிக்கையிடு. பொய் பேசாதே. நீபேசுகிறது செய்கிறது எல்லாத்திலும் உண்மைக்கு உத்தாரமாய் இரு.

௫௧. பாடம்.—பெற்றாருக்குச்செய்கடன்.

என்னை பெற்றார் எனக்கு வெகு காரியங்களை சம்பாதித்து கொடுக்கிறார்கள், நான் எப்பொழுதும் அவர்களுக்கு நன்றி காண்பிக்கவேண்டும். அவர்கள் என்னை செய்ய சொல்லி விரும்புகிறபடி செய்வேன். நான் அவர்கள் கட்டளைக்கு அடங்கி நல்லவனாய் இருப்பேன்.

முதற்பால் முடிந்தது.

PART SECOND.

Lesson 1.—*A house.*

Look what a fine house! It is very large. It is a rich man's house. All houses are not so large, Many persons live in small houses, and some, who are poor, are able to live in huts only, while others can get no place of shelter at all.

Houses are built of brick and chunam or mud; but huts are made of mud only, and are covered with leaves or straw, because the people to whom they belong are too poor to buy bricks and tiles. Bricks are made of clay,

மறுபால்.

க. பாடம்.—வீடு.

இதோ என்ன நேர்த்தியான வீடு! அது மிகவும் பெரிது. அது ஒரு சீமானுடைய வீடு. எல்லா வீடுகளும் இதுபோல பெரிதாய் இருக்கிறதில்லை. அநேகம்பேர் சிறு வீடுகளிலே குடியிருக்கிறார்கள், சில எளியவர்களுக்கு குடிசைகளிலே மாத்திரம் குடியிருக்க கூடும், வேறு சிலருக்கு குடியிருக்கிறதற்கு இடமே இல்லை.

வீடுகள் செங்கல்லினாலும் சுண்ணாம்பினாலும், அல்லது செங்கல்லினாலும் மண்ணினாலும், கட்டப்படுகின்றன. குடிசைகள் மண்ணால்மாத்திரம் கட்டப்பட்டு, ஓலையினாலாவது வைக்கோலினாலாவது மூடப்படுகின்றன; ஏனென்றால் அவற்றிற்கு சொந்தக்காரர் செங்கல்லும் ஓடும் வாங்குகிறதற்கு (கூடாத) எளியவர்கள். செங்கல்லானது களிமண்ணால் கட்

in moulds, and then burnt in a kiln, which makes them red and hard. The walls are built with bricks, but the roof is covered with tiles, and is sloped to let the water run off when it rains. We who have good houses should be very thankful that we can shelter ourselves in them from the sun and rain.

Lesson 2.— *The street.*

The street is long and wide. Look how many men and women are going along! It is made for people to walk in. There are houses on each side of the street. The houses are private property, but the street is open to every body.

டூளகளிலே அறுக்கப்பட்டு சூளையிலே சுடப் படுகின்றன; இதினுல்தான் அவைகள் சிவப் பாய் காணப்படுகின்றன. சுவர் செங்கல்லால் கட்டப்பட்டு இருக்குது, மேற் கூரையோ ஓடுகளால் மூடப்பட்டு, மழை பெய்யும்பொ ழுது தண்ணீர் வழிந்தோடும்படியாய் சாய்ப் பாய் கட்டியிருக்குது. நல்ல வீடுகளை உடை யவர்களாகிய நாம் (எரிக்கிற) வெயிலுக்கும் (அடிக்கிற) மழைக்கும் அவைகளில் இருந் துகொண்டு நம்மை காத்துக்கொள்ளக்கூடிய படியினுல் மிகுதியான நன்றியறிவு உள்ளவர் களாய் இருக்கவேணும்.

உ. பாடம்—தெருவீதி.

தெரு நீளமும் அகலமும் ஆய் இருக்குது. எத்தனையான புருஷரும் ஸ்திரிகளும் போகி ருர்கள் பார்! சனங்கள் நடக்கும்படிக்கே அ து உண்டாக்கப்பட்டு இருக்குது. தெருவின் இரு பக்கங்களிலும் வீடுகள் இருக்கின்றன. வீடுகள் அந்தந்த மனிதருடைய சொத்துக் கள், தெருவோ எல்லாருக்கும் சொந்தம். தெ

Streets should be swept, and kept clean, and free from dirt, or they will have bad smells, and make the people who live in the houses sick. We must not throw the sweepings or dirty water into the middle of the street. The sweepings should be put away in heaps on the sides, and the dirty water must be thrown into the drains. Then the people whose business it is to sweep the street, will remove the heaps, and the street will look clean, and be pleasant to walk in.

Lesson 3.—*Paddy fields.*

Here are paddy fields. How bright and green they look! By and bye, they will turn brown, when the paddy is ripe, and fit to be reaped. It

ருக்கள் பெருக்கப்பட்டு, சுத்தமாய் குப்பை இல்லாமல் இருக்கவேண்டும்; இல்லாவிட்டால் அவைகள் நாற்றமெடுக்கும், வீடுகளில் குடியிருக்கும் சனங்களை நோய்கொள்ளப்பண்ணும். தெருவின் நடுவிலே குப்பையையாவது அழுக்குத் தண்ணீரையாவது கொட்டலாகாது (எறியப்படாது) பெருக்கின குப்பைகளை கும்பல் கும்பலாய் பக்கங்களிலே கொட்டவேணும், அழுக்குத் தண்ணீரை சாக்கடையிலே ஊற்றிவிடவேணும். அப்பொழுது தெருப்பெருக்குகிற வேலைசெய்யும் மனிதர்கள் அந்த குப்பைகளை வாரிக்கொண்டு போவார்கள், அப்புறம் தெரு சுத்தமாயும் நடக்கிறதற்கு ஏற்றதாயும் இருக்கும்.

௩. பாடம்.—வயல் நிலம்.

இதோ நெல் விளைகிற வயல் நிலங்கள். எவ்வளவு மினு மினுப்பும் பச்சையுமாய் காணப்படுகின்றன! வர வர அவைகள் பழுப்பாய்ப் போம், நெல் முற்றி அறுக்குங் காலத்திலே.

will then be cut down by men, and the paddy will be trodden out, and the long stalks will be used for straw. It is from paddy that we obtain rice. The husks of the paddy are beaten off, and so rice is left; which, when boiled, is fit to eat. How useful are the paddy fields, from which we obtain our food! Paddy fields require plenty of water, or the paddy will not grow. If no rain fall for a long time, there will be very little grain, or, perhaps, the fields will yield nothing, which will bring on a famine, when many poor people may starve. Let us not walk through the paddy fields, but on the narrow banks between the fields, or we shall tread down the paddy, and do mischief.

அப்பொழுது நெல்லானது மனிதர்களால் அறுக்கப்பட்டு போர் அடிக்கப்படும்; அவற்றின் நீளமான காம்புகள் வைக்கோலாய் வழங்கப்படும். நெல்லில் இருந்துதான் நாம் அரிசியை பெறுகிறோம். நெல்லை குத்தும் பொழுது அரிசி உமியிற் பிரிந்து வேறாகுது; இதை ஆக்கினால் சாப்பிடத்தகுதியாகும். நாம் நம்முடைய ஆகாரத்தை பெற தருகிற நெல் வயல்கள் எவ்வளவு பிரயோசனமானவைகள்! நெல் வயல்களுக்கு நிரம்ப தண்ணீர் வேண்டும், இல்லாவிட்டால் அது விளையாது. நெடுங்காலம் மழை பெய்யாவிட்டால் தானியம் வெகு கொஞ்சமாய்விடும் (வெகு குறைவாய்விடும்), ஒரு வேளை வயல்கள் விளையாமலும் போகும், அப்பொழுது பஞ்சமுண்டாகி வெகுபேர் எளிய சனங்கள் பசியினால் வதைவார்கள். நாம் வயலின் வழியே நடக்காமல் அதின் நடுவே இருக்கிற சிறு தடங்களின்மேலே நடக்கக்கடவோம்; வயல்களின் மேலே நடந்தால், நெல்லை மிதித்து கெடுதி செய்வோமே.

Lesson 4.—*A tank.*

What a fine large tank! Let us go and wash in it. How cold the water is! It is nice and clear. Do not go into deep water, or you may be drowned. Can you swim? No, I cannot, but I wish to learn, if you will teach me. Well then, do in this manner as I do. Stretch out your arms, and kick out your legs, and bring them back, and do so over and over again, and you will soon learn to swim; but keep your head above the water, or you will not be able to breathe. Frogs swim, and ducks swim, and most animals swim, without being taught. Now we have been long at the tank. Come let us make haste and go home.

௪. பாடம்.—குளம்.

என்ன நேர்த்தியான பெரிய குளம்! நாம் அதில் இறங்கி குளிப்போம். தண்ணீர் எவ்வளவு குளிர்ச்சியாய் இருக்குது! அது நன்றாய் தெளிவாய் இருக்குது. ஆழத்திலே இறங்காதே, முழுகிப்போவாய். உனக்கு நீஞ்சத் தெரியுமா? தெரியாது, நீ கற்று கொடுத்தால் எனக்கு படித்துக்கொள்ள ஆசைதான். நல்லது நான் காட்டுகிறபடி செய், (எப்படி என்றால்) உன் கைகளை நீட்டி உன்கால்களை உதை, மறுபடியும் மடக்கி மடக்கி இப்படியே செய்வாயானால், நீ சீக்கிரம் நீஞ்ச கற்றுக்கொள்ளுவாய்; ஆனால் உன் தலையை தண்ணீருக்கு மேலே நிமிர்த்திக்கொண்டே இரு. இல்லாவிட்டால் நீ மூச்சு விடமாட்டாயே. தவளைகளும் வாத்துகளும் இன்னும் வெகுவான செந்துகளும் படிப்பினை இல்லாமல் நீஞ்சுகின்றன. நாம் வெகு நேரமாய் குளத்திலே இருக்கிறோமே. வா, சீக்கிரம் புறப்பட்டு வீட்டுக்குப் போவோம்.

LESSON 5.—*The bazaar.*

Come let us go to the bazaar, and buy some rice, and ghee, and curry-stuff. The bazaar consists of a great many houses, or huts, on each side of the road, and contains a great many things for sale. There are cocoanuts, and tamarind, and chillies, and saffron, and onions, and garlic, and betel-leaf, and nut, and I do not know how many more things besides. Then, there is the cloth bazaar, and fruit bazaar, and several others. Let us ask the price of rice. The bazaar man says it is one anna the measure. That is too much, as the rice is not very good. But he says there has been no rain, and there-

ரு. பாடம்.—கடைவீதி.

வா நாம் கடைக்குப் போய் கொஞ்சம் அரிசி, நெய், கறி மசாலை வாங்குவோம். கடைவீதியானது தெருவின் இரண்டு பக்கங்களிலும் அநேகம் வீடுகளாலும் குடிசைகளாலும் நிரம்பி விற்கிறதற்கு வெகுவான வஸ்துக்களையுடையதாய் இருக்குது. தேங்காய், புளி, முளகாய், மஞ்சள், வெங்காயம், வெள்ளைப்பூண்டு, வெற்றிலை, பாக்கு எல்லாம் இருக்குது. இவை அல்லாமலும் இன்னம் எத்தனை வஸ்துக்களோ அங்கே உண்டு. பின்னும் புடவைக் கடையும், பழக்கடையும், மற்றும் பற்பல கடைகளும் இருக்கின்றன. அரிசி விலை என்ன என்று கேட்போம். கடைக்காரன் ஒரு அணுவுக்கு ஒரு படி என்கிறான். அரிசி நன்றாய் இல்லை, ஆகையால் இந்த விலை அதிகம். அவன் மழை இல்லாததினால் அரிசி

fore rice is dear; so we must buy it at that price. How much do you want? Four measures. Ghee and curry-stuff are sold by weight. What quantity of each do you require? One viss of ghee, and two pollams of curry-stuff. The ghee is five annas a seer, and the curry-stuff five annas, so that you have to pay, altogether, ten annas. It is getting late, let us begone.

LESSON 6.—*The tannah (Police station).*

Who are those men with belts over their shoulders, taking a man along with them on the road? They are peons. The man whom they have seiz-

குறைச்சலாய் இருக்குது என்கிறுனே; அந்த விலைக்குத்தான் வாங்கவேணும். உனக்கு எவ்வளவு தேவை? நாலுபடி வேணும். நெய்யும் கறிமசாலையும் நிறுத்து விற்கப்படுகின்றன. அவைகள் ஒவ்வொன்றிலே உனக்கு எம்மாத்திரம் வேணும்? ஒருவீசை நெய்யும், இரண்டு பலம் கறிமசாலையும் தேவை. நெய் வீசை ஐந்து அணு, கறிமசாலை ஐந்து அணு, ஆகையால் எல்லாம் மொத்தத்திலே பத்து அணு கொடுக்க வேண்டியது. நேரமாகுதே, போவோம்.

கூ. பாடம்.—டாணு.

தங்கள் மார்பின் மேல் பில்லை போட்டுக்கொண்டு தெரு வழியே ஒரு மனிதனை பிடித்து தங்களோடு கொண்டுபோகிற அந்த மனிதர் ஆர்? அவர்கள் சேவகர். அவர்கள் பிடித்

ed is a thief. He has stolen a cloth from the cloth merchant, and the peons are going to put him in the tannah. See what a crowd of people are following! The tannah is a place where peons are stationed to prevent noise in the streets, and to preserve order, the peons also take up men who do bad actions, such as stealing, fighting, or querrelling. If you avoid evil ways when you are young, you will not act wickedly when you grow old, nor be in danger of being put in the tannah.

LESSON 7.—*The water shed.*

The water shed is a place where they give water without charge to poor people, and to coolies who go along the

திருக்கிற மனிதன் திருடன். அவன் புடவைக்காரன் இடத்திலிருந்து ஒரு புடவை திருடினான், சேவகர் அவனை டாணாவிலே வைக்க கொண்டு போகிறார்கள். எவ்வளவு சனக்கூட்டம் அவர்கள் பிறகாலே போகிறது பார்! தெருக்களிலே சந்தடி உண்டாகாமல் ஒழுங்காய் இருக்கும்படி பார்க்கிறதற்கும், திருட்டு அடிதடி சண்டை இப்படிக்கொத்த கெட்ட கிரியைகளை செய்கிற மனிதனை பிடித்துக் கொண்டு போகிறதற்கும் சேவகர்கள் வைக்கப்பட்டிருக்கிற இடமே டாணாவென்னப்படும். நீ சிறியவனாய் இருக்கும்போது கெட்ட வழிகளைவிட்டு விலகினால், பெரியவனாகும்போது துன்மார்க்கமாய் நடக்கமாட்டாய், டாணாவிலே இருக்கும்படியான மோசத்திலும் அகப்படமாட்டாய்.

எ. பாடம்.—தண்ணீர்ப்பந்தல்.

தண்ணீர்ப்பந்தலாவது என்னவென்றால், தங்கள் முதுகின்மேலே அல்லது தங்கள் தலையின்மேலே சுமை சுமந்து நெடுந்தூரம்

road, with loads on their backs, or heads, and who are faint, and thirsty, from the heat, or from walking a long distance. Look how many men and women are going to drink! The coolies put down their loads, and go and drink, and then return and take them up again. They are now refreshed, and therefore better able to work, and to walk further. It was very kind of this man who built a shed, for tired and thirsty travellers who go along the road, and to give these poor people water to drink. This teaches us that we should be kind to our fellow-creatures, and assist them when we are able to do so.

நடக்கிற நடையினுலும் வெயிலினுலும் களைத்து தவித்து தெருவழியே போகிற கூலிக்காரர்களுக்கும் எளியவர்களுக்கும் (பணமில்லாமல்) சும்மா தண்ணீர் கொடுக்கிற இடமே தண்ணீர்ப்பந்தல் என்னப்படும். தண்ணீர் குடிக்கிறதற்கு எத்தனை ஆண்பிள்ளைகளும் பெண்பிள்ளைகளும் போகிருர்கள் என்று பார்! கூலிக்காரர் தங்கள் சுமைகளை கீழே இறக்கிவிட்டு போய் தண்ணீர் குடித்து மறுபடியும் வந்து அவைகளை எடுத்துக்கொள்ளுகிருர்கள். இப்பொழுது அவர்கள் விடாய் தீர்ந்து வேலை செய்யவும், இன்னம் தூரமாய் நடக்கவும் அதிக திடன் அடைந்து இருக்கிருர்கள். களைத்து தவித்து வழி நடக்கிற பிரயாணக்காரர்களுக்கும், இந்த எளிய சனங்களுக்கும், தண்ணீர் குடிக்கிறதற்கு இந்த தண்ணீர்ப்பந்தலை கட்டி வைத்த மனிதன் வெகு தயாள புருஷனுய் இருக்கிருன். இதனுல் நாம் கற்றுக்கொள்ளுகிறதாவது, நம்மைப்போல் ஒத்த மனிதர்கள் மேல் பட்சமாய் இருந்து, நம்மால் கூடிய பொழுது அவர்களுக்கு உதவி செய்யவேண்டுமென்பதாம்.

Lesson 8.—*Works of God.*

God is good and great and wise. He made the round world, and the sun to give us light and heat. He also made the moon, and the stars. The stars seem small, and twinkle in the sky at night. When the moon is full, it shines and gives light on the earth. God made all beasts that walk on the ground, all birds that fly in the air, and he made man also. We cannot see God, but he sees all that we do, and takes care of us. He is kind and shows mercy to all who love and fear him. We should thank God for all the

அ. பாடம்.—பராபரனுடைய படைப்புகள்.

பராபரன் நல்லவர், அவர் பெரியவர், ஞானமுடையவர். அவர் இந்த உண்டையான உலகத்தை உண்டாக்கி, நமக்கு ஒளியையும், உஷ்ட்ணத்தையும் கொடுக்க சூரியனை படைத்தார். சந்திரனையும் நட்சத்திரங்களையும் கூட அவர் படைத்தார். நட்சத்திரங்கள் சிறியவைகளாய்த்தோன்றுகின்றன, இரவிலே அவைகள் மின்னுகின்றன. சந்திரன் பூரணமாய் இருக்கிறபோது அது பிரகாசித்து பூமிக்கு ஒளியை கொடுக்குது. பூமியின்மேல் நடக்கிற எல்லா மிருகங்களையும், ஆகாயத்தில் பறக்கிற எல்லா பட்சிகளையும். பராபரனே உண்டாக்கினார், மனிதனையும் கூட அவர் சிருட்டித்தார். நாம் பராபரனை காணக்கூடாது, ஆனால் அவர் நாம் செய்கிறதெல்லாவற்றையும் கண்டு நம்மை பத்திரமாய் பார்க்கிறார். அவருக்கு பயந்து அவரை நேசிக்கிற எல்லாருக்கும் அவர் இரக்கத்தை காட்டி அவர்கள்மேல் பட்சமாய் இருக்கிறார். நமக்கு இருக்கிற எல்லாவற்றிற்காகவும் நாம் அவருக்கு நன்றிசெலுத்தவேண்

things that we have. He gave us ears to hear, eyes to see, a nose to smell, a mouth to taste, and a tongue to speak, hands to feel and work, and legs and feet to walk. He gives us food to eat, and water to drink, and clear air to breathe. Above all, he has given us a mind to think, and to know right from wrong. God is just and holy: let us love and serve him all our days.

Lesson 9.—*Animals.*

Several animals are of great use to man. The horse draws carriages, and can carry a man on his back. Cows give milk. Sheep are killed for food,

டும். கேட்க காதுகளையும், பார்க்க கண்களையும், முகர மூக்கையும், உரிசைபார்க்கவும் பேசவும் வாயையும், பரிசிக்கவும் வேலைசெய்யவும் கைகளையும், நடக்க பாதங்களையும் கால்களையும், அவர் நமக்கு கொடுத்திருக்கிறார். அவர் நமக்கு பொசிக்க சாப்பாடும், குடிக்க தண்ணீரும், மூச்சுவிட சுத்தமான ஆகாயமும் அளித்திருக்கிறார். எல்லாத்துக்கும் மேலாக நமக்கு நினைக்கவும், இது சரி அது தப்பிதம் என்று அறியவும், புத்தியை கொடுத்திருக்கிறார். பராபரன் நீதியர், பரிசுத்தர், நாம் நம்முடைய நாள் எல்லாம் அவரை நேசித்து அவருக்கு ஊழியம் செய்வோமாக.

௬௦. பாடம்.— மிருகாதி.

மிருகங்களில் அநேகமானவை மனிதனுக்கு மிகவும் பிரயோசனமானவைகளாம். குதிரை வண்டிகளை இழுக்கிறது, தன் முதுகின் மேல் ஒருவனை சுமந்துகொண்டுபோம். பசுமாடுகள் நமக்கு பால் கொடுக்கின்றன. நம்முடைய ஆகாரத்துக்காக ஆடுகள் கொல்லப்

and their wool is used for clothing. Dogs watch and guard the house, and keep away thieves from coming to steal at night. They are very good and faithful animals. Cats kill rats, which are very mischievous. But we know that every animal has been made by God for some useful end. We should not therefore do them any harm by beating, or hurting them, or giving them too much work, as bad men sometimes do, for this is very wicked.

Lesson 10.—*The elephant.*

What a large black beast that is! It is the largest I have seen. It is an

படுகின்றன, அவைகளின் மயிர் வஸ்திரத் துக்கு ஆனது. நாய்கள் விழித்திருந்து வீட் டை காவல் காக்கின்றன; இரவிலே திருட வருகிற திருடரை எதிர்க்கின்றன. அவைகள் மிகவும் நல்லவைகளும் விசுவாசமுள்ளவை களுமாய் இருக்கின்றன. பூனைகள் அழிம்பு செய்கிற எலிகளை கொல்லுகின்றன. இப்ப டியே ஒவ்வொரு மிருகமும் பராபரனாலே யா தாமொரு பிரயோசனமான காரியத்துக்காக படைக்கப்பட்டிருக்குது என்று நாம் காண்கி றோமே. ஆதலால் பொல்லாத மனிதர் சில வேளைகளில் செய்கிறதுபோல, நாம் அவைக ளை அடிக்கிறதினாலும் வருத்துகிறதினாலும் அவைகளிடத்தில் அதிக வேலை வாங்குகிற தினாலும் அவைகளுக்கு எந்த பொல்லாங் கும் செய்யப்படாது, ஏனென்றால் இது மெ த்த கெட்டது.

ம. பாடம்.—யானை.

அது எவ்வளவு பெரிய கறுத்த மிருகம்! நான் பார்த்த மிருகங்களில் இதுதான் பெரி

elephant. It has four legs, and a tail like other animals, but what is that long thing hanging from its head. That is its trunk. It is a kind of long nose, through which it breathes, and also takes food up to its mouth. Though the trunk is so large, the elephant can pick up the smallest thing with it, even a pie. It is also very strong, and the elephant can break the branches of trees with it. The branches of trees are the elephants food. Those two white things like horns on each side of the trunk are tusks, and when the elephant is made angry, it will gore any creature to death with them. But this elephant is tame, and will do no harm to any one, and though it is so large

து. அது யானை. அதுக்கு மற்ற மிருகங்களைப் போல் நாலு காலும் ஒரு வாலும் இருக்குது. அதின் தலையிலிருந்து புறப்பட்டு நீண்டு தொங்குகிறது என்ன? அது யானையின் தும்பிக்கை. அது ஒரு மாதிரியான நீண்ட மூக்கு, அதினால் யானையானது மூச்சுவிடுகிறதுமல்லாமல், தன் சாப்பாட்டையும் எடுத்து சாப்பிடுகிறது. தும்பிக்கை அவ்வளவு பெரிதாய் இருந்தும் அதைக்கொண்டு யானையானது மிக சிறிதாகிய பதார்த்தத்தையும் எடுக்கிறது, ஒரு பைசாவையும் கூட எடுக்கிறதற்கு அதினால் ஆகும். யானையின் தும்பிக்கை மிகவும் வலியது, அதினால் யானை, மரங்களின் கிளைகளை உடைக்கும். மரங்களின் கிளைகளே யானைக்கு ஆகாரம். தும்பிக்கையின் இரண்டு பக்கத்திலும் கொம்புகளைப்போல் இருக்கிற அந்த இரண்டும் யானையின் தந்தங்களாம், அது கோபம் மூட்டப்படும்பொழுது அதுகளினாலே எந்த செந்துவையும் சாவும்படிக்கு குத்தும். ஆனால் இந்த யானை பழகினது, ஒருவருக்கும் இது ஒன்றுஞ் செய்யாது, இது இவ்வளவு பெரிதும் பலத்ததும் ஆய் இருந்தாலும்

and powerful, it is by nature gentle, and very obedient to its keeper. It will kneel down to let him mount and ride upon it, and will go wherever he wants.

Lesson 11.—*The camel.*

The camel is a very tall animal with a hump on its back. Look what a long neck and small head it has! It is a strange looking creature, but it is very useful. It can carry very heavy loads, and make very long journeys without being soon tired. It can walk a hundred miles in one day, in the desert, and can go without water for several days. The camel is patient, and submissive, but if it be overload-

சுபாவத்திலே சாந்தமும், யானை பாகனுக்கு அடங்கினதுமாய் இருக்குது. தன் மேல் அவன் ஏறி நடத்தும்படிக்கு அது முழங்காலை தாழ்த்தி குனிந்து கொடுக்கும், அவன் வேணுமென்கிற இடத்துக்கு எல்லாம் போம்.

௰க. பாடம்.—ஒட்டகம்.

ஒட்டகமானது மிகவும் நெடிய மிருகம், அதின் முதுகிலே ஒரு முட்டு இருக்கிறது. எவ்வளவு நீண்ட கழுத்தும் எவ்வளவு சிறிய தலையும் அதுக்கு இருக்கிறது பார்! அது ஒரு மாதிரி விநோதமான மிருகம், ஆனால் வெகு பிரயோசனமானது. மிகவும் பெரிய சுமைகளை சுமந்துகொண்டு போம், சீக்கிரத்தில் இளைப்பு அடையாமல் தூரமான பயணம்பண்ணும். நாள் ஒன்றுக்கு வஞந்தர வழியாய் நூறு நாழிகை வழி நடக்கும், அது தண்ணீர் குடியாமல் அநேக நாள் தாளும். ஒட்டகம் பொறுமையும் கீழ்ப்படிதலும் உடையது, அ

ed, it will knock its head against the rider, and sometimes utter most piteous cries.

Lesson 12.—*The jackal.*

What are those animals which we hear howling in the night? They are jackals. They are very cunning, and never appear in the day time, except by stealth. They feed on dead bodies, but will steal fowls or other small animals, and devour them, if they can get them. Sometimes jackals are hunted, and then they run very fast, and try to escape, or they hide themselves in the bushes, or in holes; but the hunters follow them, and the dogs scent them, and find them out, and then kill them.

தின்மேல் மிஞ்சின பாரம் ஏற்றிஞல் அது தன் தலையிஞல் தன் பாகனை இடிக்கும், சில வேளைகளில் மிகவும் பரிதபித்து கத்தும்.

௰உ. பாடம்.—நரி.

இராத்திரியிலே ஊளையிடுகிற சத்தம் கேட்குதே அது என்ன? அந்த சத்தம் இடுகிறவைகள் நரிகளே. அவைகள் வெகு தந்திரமானவைகள், திருட்டளவாய் அல்லாமல் பகல் காலத்திலே அவைகள் வெளிப்படுகிறதில்லை. பிணங்களைத் தின்னுகின்றன, கோழிகளும் மற்றும் சிறிய மிருகங்களும் அகப்பட்டதாஞல் திருடி தின்றுவிடும். சிலவேளைகளில் நரிகளை வேட்டை ஆடுகிருர்கள், அப்பொழுது அவைகள் வெகு வேகமாய் ஓடி தப்பிக்கொள்ள பார்க்கின்றன, இல்லாவிட்டால் செடிகளிலேயாவது குழிகளிலேயாவது போய் ஒளித்துக்கொள்ளுகின்றன; ஆஞல் வேட்டைக்காரர் அவைகளை துரத்தி அவற்றின் பின்னே ஓடுகிருர்கள், நாய்கள் மோப்பம் பிடித்து அவைகளை கண்டு கொல்லுகின்றன.

Lesson 13.—*The monkey.*

Look at those monkeys running on the tops of the houses! What a number of them there are! They are very mischievous creatures, and steal fruit and other things from the bazaars. How they grin and chatter! Look at that one carrying its young under its belly! How nimble and active they are, and how they jump from place to place, taking very long leaps! Sometimes they walk on thier hind legs only like a man, and use their forefeet as we do our hands. There is a monkey eating a piece of cocoanut, holding it in his paws, as you or I would do with our hands, and biting it bit after

௫௩. பாடம்.—குரங்கு.

வீட்டுக்கூரைகளின் மேல் ஓடுகிற அந்த குரங்குகளை நோக்கிபார்! அப்பா எத்தனை அநேகமாய் இருக்குது! அவைகள் மெத்த துடுக்கு செய்கிற செந்துக்கள், பழங்களையும் மற்ற வஸ்துக்களையும் கடைகளிலிருந்து திருடுகின்றன. அவைகள் எப்படி இளித்து கை கீ என்குது! அதோ ஒன்று தன் குட்டியை தன் வயிற்றிலே தூக்கிக்கொண்டு ஓடுகிறதை பார்! எவ்வளவு சுறு சுறுப்பும் பர பரப்பும் உடையவைகள்! இடத்துக்கு இடம் எவ்வளவு தூரம் தாண்டியும் குதிக்குது! சிலவேளைகளில் அவைகள் மனுஷரைப்போல் தங்கள் இரண்டு பின்னங்கால்களால்மாத்திரம் நடக்குது, நம்முடைய கைகளை நாம் பிரயோகிப்பது போல் தங்கள் முன்னங்கால்களை பிரயோகிக்கின்றன. நீயாவது நானுவது நம்முடைய கைகளால் பிடிக்கிறதுபோல ஒரு தேங்காய்க் கீற்றை தன் கைகளில் பிடித்து கொஞ்சம் கொஞ்சமாய் கடித்து தின்னுகொண்டு ஒரு குரங்கு

bit. They do not at once swallow their food, but keep it in a kind of bag in their cheeks, and chew and swallow the food at leisure. There is a man leading some of them with a string. These monkeys have been caught, and tamed, and are taught to dance, and jump, and do other curious tricks.

Lesson 14.—*The sun.*

The sun has risen in the sky. It is day. It shines brightly. It shines upon the trees, and the houses, and upon the water, and every thing looks sparkling and beautiful, when the sun shines upon it. It gives us light and heat, and makes us warm. It makes

அங்கே இருக்கிறதை பார். அதுகள் தின் பண்டங்களை ஒருமிக்க விழுங்குகிறதில்லை, அதுகளின் குறுட்டின் கீழே இருக்கிற ஒரு விதமான பையிலே வைத்திருந்து, பிற்பாடு மென்று தின்னுகின்றன. ஒரு மனிதன் அவைகளில் சிலவற்றை கயிற்ருல் கட்டி கொண்டு போகிருன். இந்த குரங்குகள் பிடிக்கப்பட்டு, கூத்தாடவும், குதிக்கவும், வேடிக்கைகளை செய்யவும் பழக்கப்பட்டு இருக்கின்றன.

௪௪. பாடம்.—சூரியன்.

சூரியன் ஆகாயத்தில் உதயமாயிற்று. (இராக்காலம் கழிந்தது) பொழுது விடிந்தது. சூரியன் காந்தியாய் பிரகாசிக்கின்றது. அது மரங்களின் மேலும், வீடுகளின் மேலும், தண்ணீரின் மேலும் பிரகாசிக்கின்றது, சூரியன் எறிக்கிறபோது எல்லா வஸ்துக்களும் தளதளப்பாய் அழகாய் காணப்படுகிறது. சூரியன் வெளிச்சத்தையும் உஷ்ட்ணத்தையும் கொடுத்து, நமது சரீரத்திலே சூடுண்டாகப்

the fruit ripen, and the paddy ripen. If the sun did not shine upon the fields, and upon the trees, nothing would grow. Sometimes it is partially concealed behind clouds, and then we may look at it; but when there are no clouds, and it shines with all its brightness at noon-day, we cannot look at it, for it would dazzle our eyes, and make us blind. It shines in all countries, all over the earth. Of all God's works that can be seen in the whole creation, the sun is the most beautiful and glorious.

LESSON 15. *The moon and stars.*

The moon shines to give us light in the night, when the sun is set. It it

பண்ணுது. அது கனி வர்க்கங்களை பழுக்கப் பண்ணுது, நெல்லையும் முற்றப்பண்ணுது வயல்களின் மேலும் மரங்களின்மேலும் சூரியன் எறிக்காவிட்டால் ஒன்றும் வளராது, (விளையாது). சிலவேளை அது மேகங்களால் கொஞ்சம் மறைந்துபோகுது, அப்பொழுது நாம் அதை பார்க்கலாம்; ஆனால் மேகங்கள் இல்லாத மத்தியான வேளையில் அதின் எல்லாக் காந்தியோடும் பிரகாசிக்கும்பொழுது நாம் அதைப்பார்க்கிறது கூடாது, ஏனென்றால் நம்முடைய கண்களை கூசப்பண்ணி, நம்மை குருடாக்கும். உலகம் எங்குமுள்ள எல்லாத்தேசங்களிலும் அது பிரகாசிக்கிறது. முழு உலகத்திலும் காணக்கூடிய பராபரனுடைய படைப்புகளில், சூரியன் மகா மகிமையும் வெகு சுந்தரமும் உடையதாம்.

൫ரு. பாடம்.—சந்திராதி.

சூரியன் அஸ்தமித்தபிற்பாடு இராத்திரியிலே நமக்கு வெளிச்சம் காட்ட சந்திரன் பிரகாசிக்குது. அது மிகுந்த அழகாய் வெள்ளி

very beautiful and white like silver. We may look at it always for it is not so bright as to dazzle our eyes, and it never scorches us. It lets even the little fireflies shine which are quite dark by day. The stars shine all round it; but it seems larger and brighter than the stars, and looks like a large pearl amongst a great many small sparkling diamonds. The moon is sometimes called the poor man's lantern, because he can see to walk by it at night. How very thankful should we be to God, who made the sun, moon, and stars, for our use. We ought to love him for all his gifts to man.

யைப்போல வெண்மையாய் இருக்குது. நாம் எப்போதும் அதை பார்க்கலாம், அது நம்முடைய கண்களை கூசப்பண்ணும்படியான அவ்வளவு காந்தியாய் இருக்கிறதில்லை, அது எறிக்கிறதுமில்லை. பகலிலே முழுதும் மங்கலாய் இருக்கிற சின்ன மின்மினிப்பூச்சிகளையும் கூட மின்னிக்கொள்ளப்பண்ணுகிறது. நட்சத்திரங்கள் அதைச் சுற்றி பிரகாசிக்கின்றன, ஆனால் அது நட்சத்திரங்களைப்பார்க்கிலும் அதிக பெரிதும் பிரகாசமுமாய் தோன்றுது, அது ஒளியுள்ள அநேகம் சின்ன வயிரக்கல்லுகளின் நடுவே ஒரு பெரிய முத்தைப் போல இருக்குது. சந்திரன் ஏழைகளின் விளக்கு என்றுஞ் சொல்லப்படுகிறது. ஏனென்றால் அவர்கள் இராத்திரியிலே அதின் வெளிச்சத்தில் நடக்கிறார்களே. சூரியன் சந்திரன் நட்சத்திரங்களை நம்முடைய பிரயோசனத்துக்கென்று படைத்த பெரிய பராபரனுக்கு நாம் எவ்வளவு நன்றியுள்ளவர்களாய் இருக்கவேண்டும். மனுஷனுக்கு அவர் அளித்திருக்கிற சகலவைகளுக்காகவும் நாம் அவரை சிநேகிக்க கடனாளிகளாய் இருக்கிறோம்.

LESSON 16. *Rain.*

Look how black the sky is! I think it will rain. Now it rains. How fast it rains! Rain comes from the clouds, and falls upon the earth, and does a great deal of good. Unless rain fall the paddy will not grow. The ground will become dry and hard. The grass will not look green, and the tanks will be dried up and empty. Then we cannot water the fields, and the trees, and plants, and if they get no water, they will die. God sends rain upon the earth, it is one of his chief blessings to man.

௰௩. பாடம்.—மழை.

வானம் எவ்வளவு கறுப்பாய் இருக்குது பார்! மழை பெய்யுமென்று நான் நினைக்கிறேன். மழை பெய்யுதே. எவ்வளவு படபடப்பாய் பெய்யுது! மழையானது மேகங்களிலிருந்து பூமியின்மேல் விழுந்து வெகுவான நன்மைசெய்கின்றது. மழை பெய்யாவிட்டால் நெல் விளையாது. தரை காய்ந்து கெட்டியாய்ப்போம். புல் பச்சையாய் இராது, குளங்கள் நீர்வற்றி வெறுமையாகும். அப்போழுது வயல்களுக்கும், மரங்கள் செடிகளுக்கும் தண்ணீர் இறைக்க முடியாது, அவைகளுக்கு தண்ணீர் இல்லாதேபோனால் அவைகள் சாகும். பராபரனே பூமிக்கு மழையைத் தருகிறவர், மனிதனுக்கு அவர் அருளுகிற விசேஷித்த ஆசீர்வாதங்களில் இது ஒன்று.

Lesson 17. *Thunder and lightning.*

The sun does not shine now, but it is very hot. It is quite sultry. There is no wind at all. The leaves of the trees do not move. The sky looks very black; and how dark it is! Ah! What a bright light shone through the room! Now it is gone. It did not last long. What was it? It was lightning. Lightning comes from the clouds. Now it lightens again. What a noise there is in the air, just over our heads! That is thunder. How loud the thunder is! It begins to rain. O! What large drops! Now it rains fast.

End of Part Second.

௰எ. பாடம்.—இடியும் மின்னலும்.

வெயில் எறிக்கக்காணோம், வெகு வெப்பமாய் இருக்குது. புழுக்கமாய் இருக்குது. காற்று கொஞ்சமும் இல்லை. மரங்களின் இலைகள் அசையக்காணோம். ஆகாயம் கன்னங் கறேலென்றிருக்குது: எவ்வளவு இருட்டாய் இருக்குது! அறைக்குள்ளே எவ்வளவு பிரகாசமான வெளிச்சம் தோன்றிற்று! அதை இப்போது காணோம். அது நெடுநேரம் நிற்க இல்லை. அது என்ன அது? அது மின்னல். மின்னல் மேகத்திலிருந்து உண்டாகுது. திரும்பவும் மின்னுது. நம்முடைய தலைக்கு நேராய் மேலே என்ன சத்தம் உண்டாய் இருக்குது! அதுதான் இடி. இடி எவ்வளவு முழக்கமாய் இருக்குது! மழை பெய்யத் தொடங்குகிறது. ஓ! என்ன பெரும் பெருந் துளிகள்! மழை வலுத்துப் பெய்கிறது.

மறுபால் முற்றிற்று.

எயா. 1

ஆ. ஜீ 2

எ. 3

FIRST BOOK

LESSONS IN READING.

[illegible]